10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

147. 1981 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளைச் சேர்ந்த 7-ஆவது விதியில் சில திருத்தங்கள் செய்வது தொடர்பாக மது விலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 16–8–1982 ஆம் நாளிட்ட 616 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ், பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

148. ஒக்கியம் துரைபாக்கம் கிராமத்தைச் சேர்ந்த நி.அ.ப. எண் 209-2ஏ மற்றும் இதர நி.அ.ப. எண்களிலுள்ள சென்னை பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது தொடர்பாக வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 19–7–1982 ஆம் நாளிட்ட 635 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்ட சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

149. கீழம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த நி.அ.ப. எண் 208/4, 209-1-லிருந்து 209/5ஏ வரையிலுள்ள சென்னை பெருந் திட்டத்தில் மாற்றம் செய்வது தொடர்பாக வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 19–7–1982ஆம் நாளிட்ட 637ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

150. இசாபல்லாவரம் கிராமத்தைச் சேர்ந்த நி.அ.ப. எண் 2, 3, 4, 6/2 (பாகம்) 12/2 மற்றும் 11/2-ஆுள்ள சென்னை பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது தொடர்பாக வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 20–7–1982 ஆம் நாளிட்ட 658 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

151. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் எட்டாம் ஆண்டறிக்கையும் கணக்குகளும், 1981–82 (தமிழ்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

38. உடுக்குறியிடாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 201-லிருந்து 400 வரை).